முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1269

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

21.03.2023, செவ்வாய்கிழமை

1. தர்மஞானியே அரங்கா வாழ்க
   தவசியாய் வாழும் தேசிகாவாழ்க
   கர்மவினைகளை உலகோர்க்கு விரட்டி
   காக்கவந்த கருணைவடிவான ஞானியே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் பங்குனி மாதம் 07 ம் நாள், 21.03.2023, செவ்வாய்கிழமை)
   தாழ்விலா அரங்கனின் வழிகாட்டலே
   தரணியை மீட்டு காத்தருளும்
3. அருளாக அறமாக அரங்கன் தரும்
   ஆற்றலும் அனைத்து உபதேசமுமே
   அகிலத்தார்க்கு மாற்றம் தந்து அருள்புரியும்
   அண்ணலாக அரங்கன் தரும் அருளமுது
4. அருளமுது உலகோர்க்கு பிணிநீக்கும் மருந்தாகும்
   அரங்கன் குடிலணுகி உண்பவர்க்கெல்லாம்
   வரங்களாக மகா சக்திகள் சூட்சுமமாகக் கூடி வையகத்தில்
   வாழுங்காலம் ஞானிகளுடைய ஆசியும் முருகப்பெருமான் என்தயவும்கூடி சிறக்கும்
5. சிறக்கவே அரங்கன் உபதேசமும்
   சிறப்பாக அரங்கன் செய்துவரும் தர்மமும்
   மறுப்பின்றி உலகத்தை மாற்றும் மகாசக்தியாகும்
   மண்ணுலகில் இதை அறிந்துகொண்டு உலகோர் மகான் அரங்கன்வழி சரணாகதிகொண்டு
6. கொண்டுமே சன்மார்க்க நெறிபிறழா
   குறையின்றி அரங்கன் தர்மத்தை
   தடையின்றி உலகமெல்லாம் செய்துவர
   தானவர்களெல்லாம் தவசி என்கின்ற நிலைக்கு உயர்ந்து
7. உயர்ந்துமே அரங்கன் தேடல்வழி
   உயர்வான ஞானிகளாகவும் சக்திபெருகி
   உலகமாற்றத்தையே அரங்கன் நோக்கமாக நிறைவேற்றி பலம்பெறுவர்
   ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–